

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

8-ஆம் திருமொழி - நல்லதோர்தாமரை

_______*_______

* நல்லதோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேல்பனிசோர *
அல்லியும்தாதும்உதிர்ந்திட்டு அழகழிந்தாலொத்ததாலோ *
இல்லம்வெறியோடிற்றாலோ என்மகளைஎங்கும்காணேன் *
மல்லரையட்டவன்பின்போய் மதுரைப்புறம்புக்காள்கொலோ? (1)

ஒன்றுமறிவொன்றில்லாத உருவறைக்கோபாலர்தங்கள் *
கன்றுகால்மாறுமாபோலே கன்னியிருந்தாளைக்கொண்டு *
நன்றும்கிறிசெய்துபோனான் நாராயணன்செய்ததீமை *
என்றும்எமர்கள்குடிக்கு ஓரேச்சுக்கொலாயிடுங்கொலோ? (2)

குமரிமணம்செய்துகொண்டு கோலம்செய்துஇல்லத்திருத்தி *
தமரும்பிறரும்அறியத் தாமோதரற்கென்றுசாற்றி *
அமரர்பதியுடைத்தேவி அரசாணியைவழிபட்டு *
துமிலமெழப்பறைகொட்டித் தோரணம்நாட்டிடுன்கொலோ? (3)

ஒருமகள்தன்னையுடையேன் உலகம்நிறைந்தபுகழால் *
திருமகள்போலவளர்த்தேன் செங்கண்மால்தான்கொண்டுபோனான் *
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்றஅசோதை *
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறம்செய்யுங்கொலோ? (4)

தம்மாமன்நந்தகோபாலன் தமீஇக்கொண்டுஎன்மகள்தன்னை *
செம்மாந்திரேயென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணும்செவ்வாயும் *
கொம்மைமுலையும்இடையும் கொழும்பணைத்தோள்களும்கண்டிட்டு *
இம்மகளைப்பெற்றதாயர் இனித்தரியாரென்னுங்கொலோ? (5)

வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச்செய்துஎன்மகளை *
கூடியகூட்டமேயாகக் கொன்Tஉகுடிவாழுங்கொலோ?
நாடுநகரும்அறிய நல்லதோர்கண்ணாலம்செய்து *
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ? (6)

அண்டத்தமரர்பெருமாஅன் ஆழியான்இன்றுஎன்மகளை *
பண்டப்பழிப்புக்கள்சொல்லிப் பரிசறஆண்டிடுங்கொலோ? *
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலப்பட்டம்தவித்து *
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொலோ? (7)

குடியில்ப்றந்தவர்செய்யும் குணமொன்றும்செய்திலன் அந்தோ! *
நடையொன்றும்செய்திலன்நங்காய்! நந்தகோபன்மகன்கண்ணன் *
இடையிருபாலும்வணங்க இளைத்திளைத்துஎன்மகள்ஏங்கி *
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ? (8)

வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்எழுந்து *
கண்ணுறங்காதேயிருந்து கடையவும்தான்வல்லள்கொலோ? *
ஒண்ணிரத்தாமரைச்செங்கண் உலகளந்தான்என்மகளை *
பண்ணறையாப்பணிகொண்டு பரிசறஆண்டிடுங்கொலோ? (9)

* மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு *
ஆயர்கள்சேரியிலும்புக்கு அங்குத்தைமாற்றமுமெல்லாம் *
தாயவள்சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன *
தாயதமிழ்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே. (10)

அடிவரவு : நல்லது ஒன்றும் குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்டத்து குடியில் வெண்ணிறம் மாயவன் என்னாதன்.